நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## தரம்: உயர்நிலை

**December 2006**

வினாக்கள் : 60

வழங்கப்படும் நேரம் : 70 நிமிடங்கள்

வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள்

உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 1 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு மிகச்சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

காற்பந்து விளையாட்டைப் பார்த்திருப்பீர்கள். பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பெரியோர்கள் தான் அதனை விளையாடுவார்கள். அண்மையில் தமிழ்நாட்டில் நடந்த ஒரு விளையாட்டு பார்வையாளர்களைப் பரவசத்தில் ஆழ்த்திவிட்டது. தன்னிடம் வரும் பந்தை லாவகமாகத் திருப்பி எடுத்துக்கொண்டு ஓடி எதிரில் வரும் வீரரை சாமர்த்தியமாக ஏமாற்றி கண் இமைக்கும் நேரத்தில் மின்னலாக 'கோல்' போட்டுவிட்டு மகிழ்ச்சியில் குதிக்கிறான் நிகில். அனைவரும் மூக்கில் விரலை வைத்தபடி அதனை பார்த்து இரசிக்கிறார்கள். இதில் என்ன ஆச்சரியம் என்று கேட்கிறீர்களா? நிகில் ஒரு சிறுவன். இரண்டு வயது மட்டுமே ஆன ஒரு சிறுவன்.

அவன் பந்தை விளையாட ஆரம்பித்தது ஒரு வயதிலாம். பொம்மைகளை வைத்து விளையாடும் வயதில் பந்தை காலால் எட்டி உதைக்கும் அழகும், வளர்ந்த விளையாட்டு வீரர்களின் நடுவில் புகுந்து விளையாடும் வல்லமையுமாக ஒரு தேர்ந்த விளையாட்டு வீரன் போலவே காட்சியளிக்கிறான் நிகில். அவன் ஆடுவதைப் பார்த்தால் பிரமிப்பாக இருக்கிறது. பந்தை எந்த வேகத்தில் உதைத்தால் அது 'கோல்' ஆகும் என துல்லியமாகக் கணக்கிடும் திறன் அவனிடம் இருக்கிறது என்கின்றனர் அவனோடு விளையாடும் சக வீரர்கள்.

நிகிலின் அப்பாவும் ஒரு காற்பந்து விளையாட்டு வீரர் தான். அவர் பயிற்சி செய்யும் போது நிகிலும் கூடவே செல்வது வழக்கம். ‘‘அவன் ஐந்து மாதக்குழந்தையாக இருக்கும்போதே காற்பந்து போட்டிகளைப் பார்க்க ஆரம்பித்துவிட்டான். என் மடியில் இருந்தவாறே உன்னிப்பாக போட்டிகளைப் பார்ப்பான். யாராவது கோல் போட்டால் சிரிப்பான்’’ என்கிறார் அவன் அம்மா. அவன் பதினொரு மாதத்திலேயே நடக்க ஆரம்பித்துவிட்டான். எப்போதும் பந்தை பக்கத்தில் வைத்து விளையாடுவான். ஒரு வயதிலே பந்தை மெதுவாகத் தட்ட ஆரம்பித்துவிட்டான். நான் வேலை முடிந்து வந்ததும் பந்தை என்னிடம் கொடுத்து விளையாடக் கூப்பிடுவான். முறைப்படி காற்பந்து விளையாடும் பயிற்சி பெறுவதற்கு ஒருவர் குறைந்தது ஐந்து வயதினராக இருக்கவேண்டும். ஆனால் இவனை நாங்கள் மூன்று வயதிலேயே சேர்க்கப்போகிறோம் என்கிறார் அப்பா பாலசந்தர்.

தினமும் 40 முதல் 60 நிமிடநேரம் வரை சலிக்காமல் விளையாடுவான். இரவில் காற்பந்து விளையாடாமல் அவனால் தூங்கவே முடியாது என்கிறார் அவர். இந்தியாவின் எதிர்கால காற்பந்து நட்சத்திரமாக உலகையே ஒரு கலக்கு கலக்குவான் என்று தோன்றுகின்றதல்லவா?

(விகடன் சஞ்சிகைக்காக உமா கண்ணன் எழுதிய கட்டுரையிலிருந்து பிரித்தெடுத்த பகுதி)

.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 1-5: இக்கட்டுரையில் பேசப்பட்ட சிறுவனின் இது நாள் வரையான நிகழ்வுகளில் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை உரிய வயதோடு தொடர்பு படுத்துக.**

1. தமிழ் நாட்டில் பார்வையாளர்களை பிரமிக்க வைத்த ஆட்டத்தில் விளையாடிய போது அவனுடைய வயது -

2. முதன் முதலில் விளையாட ஆரம்பித்த போது நிகிலின் வயது -

3. தந்தையுடன் காற்பந்து விளையாட்டை நிகில் பார்க்கச் சென்றபோது அவன் வயது -

4. முறைப்படியான காற்பந்து பயிற்சி பெறும் வாய்ப்பு கிடைக்க இருப்பது -

5. இந்த ஆண்டு நிகிலனின் வயது -

| | |
|---|---|
| **(a) ஐந்து மாதம்** | **(c) இரண்டு வயது** |
| **(b) ஒரு வயது** | **(d) மூன்று வயது** |

**வினாக்கள் 6-10: பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

6. இக்கட்டுரையில் புகழ்ந்துரைக்கப்படுவது
(a) காற்பந்து விளையாட்டு வீரர்கள்
(b) பாலசந்தர்
(c) நிகில்
(d) விகடன்

7. பின்வருவனவற்றில் சரியான வாக்கியம் எது?
(a) பெரியோர்கள் மட்டுமே காற்பந்து விளையாடுவர்.
(b) சிறுவர்கள் இரண்டு வயதில் காற்பந்து விளையாடவேண்டும்.
(c) சிறுவர்கள் பொம்மைகளை வைத்து காற்பந்து விளையாடவேண்டும்.
(d) நிகில் இரண்டு வயதில் காற்பந்து விளையாடி அனைவரையும் ஆச்சரியப்படவைத்தான்.

8. நிகில் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் தவறான கூற்று எது?
(a) அவன் பொம்மைகளோடு மட்டும் தான் விளையாடுவான்.
(b) மைதானத்தில் வீரர்களின் நடுவில் புகுந்து விளையாடுவான்.
(c) மிகவும் சாதுரியமாக எதிர்ப்படும் வீரரை ஏமாற்றிவிடுவான்.
(d) கண்ணிமைக்கும் நேரத்தில் ‘கோல்’ போடும் ஆற்றல் உண்டு.

9. பின்வருவனவற்றில் சரியான கூற்று எது?
(a) பாலசந்தர் ஒரு கிரிக்கெட் வீரர்.
(b) நிகிலின் அப்பா பெயர் பாலசந்தர்.
(c) நிகில் ஐந்து வயதில் விளையாட ஆரம்பித்துவிட்டான்.
(d) யாராவது ‘கோல்’ போட்டால் நிகிலுக்கு கோபம் வரும்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

10. ஒருவர் முறைப்படி காற்பந்து பயிற்சி பெறுவதென்றால்
(a) அவர் உயர்வகுப்பில் படிக்கவேண்டும்.
(b) இரண்டு வயதாக இருக்கவேண்டும்.
(c) குறைந்தது ஐந்து வயதினராக இருக்கவேண்டும்.
(d) எந்த வயதெல்லையும் இல்லை.

**வினாக்கள் 11-15: பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

11. நிகிலின் ஆட்டத்தைப் பார்த்த மக்கள் மூக்கில் விரலை வைத்தார்கள். இங்கு மூக்கில் விரலை வைத்தல் என்பது
(a) அதிர்ச்சியடைதல்.
(b) முகத்தில் விரலை வைத்தல்.
(c) பரவசப்படுதல்.
(d) பிரமிப்படைதல்.

12. ஒரு தேர்ந்த விளையாட்டு வீரன் போலவே காட்சியளிக்கிறான் நிகில். இங்கு தேர்ந்த என்றால்
(a) பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்.
(b) அனுபவமும் பயிற்சியும் உள்ளவர்.
(c) தானே தேர்ந்தெடுத்தவர்.
(d) இவை எதுவுமல்ல.

13. எந்த வேகத்தில் பந்தை அடித்தால் அது ‘கோல்’ ஆகும் என துல்லியமாகக் கணக்கிடும் ஆற்றல் நிகிலுக்கு உண்டு. இங்கு துல்லியம் என்பது
(a) மிகச்சரியாக
(b) அண்ணளவாக
(c) சிரமப்பட்டு
(d) ஓரளவு சரியாக

14. நிகில் தினமும் ஒரு மணிநேரம் வரை சலிக்காமல் பயிற்சி செய்வான். இங்கு சலிப்பு என்பது
(a) திரும்பத் திரும்பச் செய்வதால் ஏற்படும் வலி.
(b) திரும்பத் திரும்பச் செய்வதற்கிடையில் எடுக்கும் ஓய்வு.
(c) திரும்பத் திரும்பச் செய்வதால் ஏற்படும் சோர்வு.
(d) இவை எதுவுமல்ல.

15. இந்த உரைப்பகுதியை வாசித்து முடிந்ததும் உமக்குத் தோன்றுவது
(a) குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று.
(b) விளையும் பயிரை முளையில் தெரியும்.
(c) தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை.
(d) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 16-20: பின்வரும் பாடல்வரிகள் அதன் கீழுள்ள எந்தக் கூற்றுடன் பெரிதும் பொருந்துகின்றன என்று கண்டு பிடியுங்கள்.**

16. சிங்கநடை போட்டு சிகரத்தில் ஏறு
    சிகரத்தை அடைந்தால் வானத்தில் ஏறு

17. மானமே வாழ்வாய் நின்றோம் மலைகளை மோதி வென்றோம்

18. நம்பிக்கை என்பது வேண்டும் நம் வாழ்வில்
    இலட்சியம் நிச்சயம் வெல்லும் ஒரு நாளில்

19. பலாப்பழத்தின் சுவை போயிற்று பழஞ்சோற்றின் ருசி போயிற்று
    நிலாக் காய்ந்த அந் நெடுநிலத்தின் நினைவும் போயிற்று

20. தமிழுக்கும் அமுதென்று பேர்
    அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

| |
|---|
| **(a)** வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியங்களை நோக்கி நம்பிக்கையோடும் துணிவோடும் பயணிக்கவேண்டும். எமது இலட்சித்தை நாம் அடையலாம். |
| **(b)** எனது தாய்மண்ணின் சுகத்தை சொல்லி அடங்காது. வெண்ணிலவின் ஒளியில் வீட்டுமுற்றத்தில் உறவுகளோடு கூடி உண்டு களித்த நாட்கள் அவை. அதனை இப்போது நினைக்கவும் நேரமில்லாது போயிற்று. |
| **(c)** உலகத் தமிழர்கள் இன்று ஒன்றாகி நிற்கிறார்கள். எமது வாழ்க்கையிலே மானத்தையே முக்கியமாகக் கருதுகிறோம். எத்தகைய தடைகள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு முறியடித்து வெல்லும் ஆற்றல் எமக்குண்டு. |
| **(d)** எமது மொழி அமிழ்தினும் இனிய மொழி. அதனை எமது வாழ்க்கையில் எல்லாவற்றையும் விட மேலாகவே மதிக்கிறோம் என்று அதன் திறம் தெரிந்தவர்கள் உரைப்பார்கள். |

**வினாக்கள் 21-25: பின்வரும் ஒவ்வொரு சோடி வாக்கியங்களையும் இணைப்பதற்குப் பொருத்தமான சொல்லைக் கண்டு பிடியுங்கள்.**

21. உன்னிக்கிருஸ்ணன் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரராக இருந்தார்.
    அவர் ஒரு பிரபல பாடகராக மிளிர்கிறார்.

22 யாழ்ப்பாணத்திற்கான பிரதான பாதை மூடப்பட்டுவிட்டது.
   மக்கள் உணவு மற்றும் வைத்திய வசதிகள் இன்றித் தவிக்கிறார்கள்.

23 அவுஸ்திரேலியாவின் எல்லா பெரிய நகரங்களிலும் தமிழர்கள் வசிக்கிறார்கள்.
   சிட்னி, மெல்பேர்ன் நகரங்களில் அதிக அளவில் வசிக்கிறார்கள்.

24. இயற்கையை நாம் அடிக்கடி சீண்டிக்கொண்டே இருக்கிறோம்.
    இடையிடையே அது நம்மை சீண்டுகிறது.

25 நம் வீடுகளில் பேச்சு மொழியாக தமிழ் இருக்கவேண்டும்.
   எமது அடையாளத்தைத் விரைவில் தொலைத்துவிடுவோம்.

| | |
|---|---|
| **(a)** அதனால் | **(c)** அல்லாவிடின் |
| **(b)** இப்போது | **(d)** எனினும் |

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 26-30: பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையைக் குறிப்பிடுக.**

26. "நீராறும் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழில் ஒழுகும்
சீராறும் வதனம் எனத் திகழ் பரதக்கண்டம்", என்று பாடியவர்

27. "ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்", என்று பாடியவர்

28. "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆகும்", என்று பாடியவர்

29. "வெள்ளை நிறப்பூவுமல்ல வேறு எந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது", என்று பாடியவர்

30. "நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ", என்று பாடியவர்

| | |
|---|---|
| (a) மகாகவி பாரதியார் | (c) விபுலானந்த அடிகள் |
| (b) இளங்கோ அடிகள் | (d) மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை |

**வினாக்கள் 31-35: பின்வரும் வினாக்களுக்கான பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

31. தமிழ்ப் பாடநூல்களை சிட்னியில் வெளியிடுவோர்

32. தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளை வருடந்தோறும் நடத்திவருவோர்

33. தமிழ் நூலகத்தை சிட்னியில் நிறுவி நடத்துவோர்

34. கலப்பை என்ற சஞ்சிகையை வெளியிடுவோர்

35. தமிழ்த் தொலைக்காட்சிக்கென சிட்னியில் நிகழ்சிகளை தாயாரித்தோர்

| | |
|---|---|
| (a) சிகரம் | (c) தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு |
| (b) அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம் | (d) சிட்னி தமிழ் அறிவகம் |

**வினாக்கள் 36-38: பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டு பிடியுங்கள்.**

36. Key Board
37. World Wide Web
38. Software

| |
|---|
| (a) இணையத் தளம் |
| (b) விசைப்பலகை |
| (c) மென்பொருள் |
| (d) வையகவிரிவு வலை |

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 39-42 : பின்வரும் பட்டியல் ஒவ்வொன்றிலும் ஒன்று வேறுபட்டு நிற்கின்றது. அதனைக் கண்டு பிடியுங்கள்.**

39.
(a) குமுதம்
(b) கல்கி
(c) தினமணி
(d) ஈழமுரசு

40.
(a) கவிஞர் வைரமுத்து
(b) கவிஞர் வாலி
(c) கவிஞர் அம்பி
(d) கவிஞர் தமிழன்பன்

41.
(a) தஞ்சை பெரியகோயில்
(b) மதுரை மீனாட்சிஅம்மன்
(c) மாமல்லபுரத் தேர்கள்
(d) சிட்னி துறைமுகப் பாலம்

42.
(a) பிட்டு
(b) சப்பாத்தி
(c) பிற்சா
(d) பூரி

**வினாக்கள் 43-45 : பின்வரும் சொற்களுடன் தொடர்புபட்ட சொற்களை இனங்காணுக.**

43. பெண்ணுரிமை

44. குடும்ப விழுமியம்

45. சத்திய சோதனை

| |
|---|
| (a) **மகாத்மா காந்தி** |
| (b) **பெண்விடுதலை** |
| (c) **தமிழ்ப் பேசும் சமூகம்** |
| **(d) விவேகானந்தர்** |

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 46-50 : பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை ஊகித்து விடைத்தாளில் குறிப்பிட்ட இலக்கத்திற்கு எதிரே எழுதுக.**

பறவை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் சென்று வாழுமானால், பழைய நாட்டின் (46)____________ மறந்துவிடுகிறது. அவ்வாறே புதிய இடங்களுக்கும் புதிய மரங்களுக்கும் சென்று வாழும்போதெல்லாம், பழைய இடங்களின் தொடர்பையும் (47) ____________. ஆனால் மனிதன் ஓர் ஊரிலிருந்தேனும், ஒரு நாட்டிலிருந்தேனும் வேறோர் ஊருக்கும், வேறொரு நாட்டிற்கும் சென்று (48) ____________ நேர்ந்தால் பழைய ஊர்த் தொடர்பையும் நாட்டுத் தொடர்பையும் மறப்பதில்லை. அந்த நினைவுகளுடனே புதிய இடத்து வாழ்வை நடத்துகிறான். மனிதன் படைக்கும் இலக்கியமும் காலத்திற்கு ஏற்ப (49) ____________ வடிவங்களைப் பெற்ற போதிலும், பழைய இலக்கியங்களின் தொடர்பையும் அடிப்படையையும் விடுவதில்லை. அவற்றையே இலக்கிய மரபு என்று கூறுதல் (50) ____________ இலக்கியத்தின் வரலாற்றை ஆராய்ந்தால் பழைய இலக்கியத்தின் செல்வாக்கு, மரபு என்ற பெயரால் இருந்து வருதலைக் காணலாம்.

**ஆக்கத்திறன் வினாக்கள் 51-60**

**பின்வரும் ஏதாவது ஒரு வினாவுக்கு விடையளிக்கவும். உங்கள் விடை வினாவில் கேட்கப்பட்ட வடிவத்தில் இருக்கவேண்டும். முதலாம் வினா தினக்குறிப்பேட்டில் எழுதும் முறை. இரண்டாம் வினா கட்டுரை வடிவில் அமையவேண்டும்.**
**உங்கள் ஆக்கங்கள் 75 சொற்களுக்கு குறையாது இருக்கவேண்டும்.**

1. நீங்கள் ஒரு கைத்தொலைபேசியாக இருந்தால்............
   ஒரு கடையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறீர்கள். பலரும் உங்களை வந்து பார்த்து செல்கின்றனர். சிலர் உங்களை தொட்டுப் பார்த்து விலையையும் கேட்டு விட்டு அப்பால் நகர்ந்து செல்கின்றனர். மூன்றாம் நாள் உங்களை ஒரு மாணவன் வாங்கிச் செல்கிறார். காட்சி அறையில் இருந்த நாள் முதலாக உங்களை வாங்கிச் சென்ற நாள் வரைக்கும் உங்கள் அனுபவங்களை தினக்குறிப்பேட்டில் வரைக. முதன் முதலாக உங்களை வாங்கியவர் உங்களைப் பயன்படுத்தியது வரை நீங்கள் கற்பனை செய்யலாம்.

**அல்லது**

2. உங்கள் மனதுக்குப் பிடித்த ஒரு பாடல், கதை அல்லது ஒரு திரைப்படம் தொடர்பாக உங்கள் அனுபவங்களைத் தொகுத்து எழுதுக.

இதுவே இறுதிப் பக்கம்.